# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## விரிவாக்கக் கல்வி இயக்ககம், சென்னை
## ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல் - 637 002

இதழ் 3 | செய்தி மடல் | எண் : 2

ஏப்ரல் - செப்டம்பர் 2018



**முதன்மை ஆசிரியர்**

முனைவர் **நி.கு. சுதீப்குமார்**
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்

**ஆசிரியர்**

முனைவர் **ந. அகிலா**
முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்

**இணை ஆசிரியர்**

முனைவர் **சு. சத்யா**
விஞ்ஞானி / உதவிப் பேராசிரியர்
மண்ணியல் மற்றும்
வேளாண் வேதியியல்

**ஆசிரியர் குழு**

முனைவர் **சி. ஷர்மிளா பாரதி**
முனைவர் **பெ. முருகன்**
திரு. **சி. சங்கர்**
மருத்துவர் **ம. ஜோதிலெட்சுமி**
முனைவர் **சி. பால்பாண்டி**
முனைவர் **மா. டெய்சி**


நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகள், இளைஞர்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வெளிவரும் புதிய தொழில்நுட்பங்களை வயல் வெளிச்சோதனை, முதல்நிலை செயல்விளக்கம், விழிப்புணர்வு முகாம் மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மூலம் கொண்டு சேர்ப்பத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாயிகள், பண்ணை மகளிர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர்களின் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு வேளாண்மை அறிவியல் நிலையம் பல்வேறு வகையான பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், கண்காட்சிகள், செயல்விளக்கங்கள் மற்றும் வயல் விழாவினை நடத்தியது. ஏப்ரல் முதல் செப்டம்பர் 2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் செய்த முக்கிய பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### புதிய அறிவியல் தொழில்நுட்பங்கள் மூலம் கறவை மாடுகளில் இனப்பெருக்க மேலாண்மை குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கு

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் ஒருநாள் விழாவாக புதிய அறிவியல் தொழில்நுட்பங்கள் மூலம் கறவைமாடுகளில் இனப்பெருக்க மேலாண்மை என்ற தலைப்பில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை 28.08.2018 அன்று நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் மெட்டாலா என்ற கிராமத்தில் உள்ள மைனர் பாக்கியம் மஹாலில் நடத்தியது. இவ்விழாவில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் வி.சி. பொன்னுவேல் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி கால்நடை பராமரிப்புத்துறையில் நடப்பாண்டிலுள்ள திட்டங்களை பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடினார். கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கால்நடை இனப்பெருக்க மற்றும் ஈனியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் மருத்துவர் எம். செல்வராசு அவர்கள் கலந்து கொண்டு கறவை மாடுகளில் புதிய அறிவியல் தொழில்நுட்பங்கள் கொண்டு இனப்பெருக்க மேலாண்மை என்ற தலைப்பிலும் கால்நடை உணவியல் துறை உதவிப்பேராசிரியர் மருத்துவர் சி. கதிர்வேலன் அவர்கள் தண்ணீர் மற்றும் தீவனப் பயிர்களில் நைட்ரேட் நச்சுக்களின் அளவை கண்டறியப்படும் வகைகள் குறித்தும், நச்சுக்களை தடுக்கும் முறைகளையும் விரிவாக எடுத்துரைத்தார். இவ்விழாவில் 11 கண்காட்சிகள் அறிவியல் ரீதியான முறையில் கால்நடைகளில் இனப்பெருக்கத்தை மேம்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. மொத்தமாக 504 விவசாயிகளும் மற்றும் 28 களப்பணியாளர்களும் கலந்து கொண்டனர்கள். தூய்மை பால் உற்பத்தி சம்பந்தமான தொழில்நுட்பங்களும் நைட்ரேட் நச்சுக்களின் அளவு பசுந்தீவனம் மற்றும் பாசன நீரில் கண்டறியும் முறைகளும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இவ்விழா சம்பந்தமான கருத்துக்களும் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டது. மேலும் விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளிப்புடன், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தேர்ந்தெடுக்கப்பட்ட தத்து கிராமத்தில் கால்நடை வளர்ப்பிற்கு தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.



### தூய்மையே பாரதம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்



நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த 15.09.2018 முதல் 02.10.2018 வரை தூய்மையே பாரதம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் நடத்தியது. தூய்மையே பாரதம் குறித்த விழிப்புணர்வு முகாம்கள், செயல்விளக்கங்கள், ஆலோசனைகள் மற்றும் நிலைய பயிற்சிகள் நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய

அலுவலர்கள் இந்நிகழ்ச்சியினை 15.09.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வழிப்பாதைகள், அலுவலகம், கழிவுப்பாதைகள் ஆகியவற்றை சுத்தம் செய்தது. இதே நிகழ்ச்சியானது எருமைப்பட்டி வட்டாரத்திலுள்ள வடவத்தூர் மற்றும் ஜம்புமடை கிராமங்களில் 24.09.2018 மற்றும் 25.09.2018 அன்றும் சேந்தமங்கலம் வட்டாரத்தை சேர்ந்த நடுக்கோம்பை கிராமத்தில் 28.09.2018 அன்றும் நடத்தி விவசாயிகளுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. எளிதில் மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை சேகரித்து பிரித்தெடுக்கும் முறைகளை பற்றிய செயல்விளக்கத்தை சேந்தமங்கலம் வட்டாரத்திலுள்ள போடிநாயக்கனூர் கிராமத்தில் 18.09.2018 அன்று நடத்தியது. சுகாதாரம் என்ற தலைப்பில் கழிப்பிடத்தை பயன்படுத்தும் முறைகள், கை கழுவும் முறைகள் மற்றும் தூய்மையாக இருப்பதற்கான மற்ற முறைகள் குறித்த நிகழ்ச்சி நாமக்கல் வட்டாரத்தில் லத்துவாடி கிராமத்தில் 17.09.2018 அன்றும் மோகனூர் வட்டாரத்தில் அணியாபுரம்புதூர் கிராமத்தில் 20.09.2018 அன்றும் நடத்தியது. விவசாயிகளிடையே தாவரக்கழிவுகளை கொண்டு மட்கும் உரம் தயாரிப்பதற்கான மட்கும் உரக்குழி அமைத்தல் குறித்த உரைகளும் செயல்விளக்கமும் 27.09.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் செய்து காண்பிக்கப்பட்டது.

**தேசிய ஊட்டச்சத்து வார விழா - 2018**



தேசிய ஊட்டச்சத்து வார விழா - 2018 மோகனூர் வட்டாரத்திலுள்ள அணியாபுரம்புதூரில் 06.09.2018 அன்று 85 பண்ணை மகளிர்களை கொண்டு வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தியது. குழந்தைகளிடையேயும் மற்றும் பண்ணை மகளிர்களிடையேயும் சமச்சீரற்ற உணவியல் ஏற்படும் விளைவுகள் குறித்தும் சமச்சீரான உணவினை எடுத்துக்கொள்ளுவதால் உண்டாகும் நன்மைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இத்துடன் அன்றாடம் உணவில் பலவகை தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் காய்கறிகளை எடுத்துக்கொள்வதால் மனித வளத்தில் உண்டாகும் மாற்றங்கள் பற்றியும் வருடம் முழுவதும் இயற்கை முறையில் காய்கறிச்செடிகளை வீட்டுத் தோட்டமாக வளர்ப்பதற்கு தேவையான உத்திகளும் எடுத்துரைக்கப்பட்டது. சத்துமிகு வீட்டு காய்கறித் தோட்டத்தை மேம்படுத்தும பொருட்டு 5 விவசாய பெண்மணிகளுக்கு 5 வகையான காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. மேலும் இவ்விழாவை சிறப்பிக்கும் வண்ணம் வேளாண் பெண்மணிகளுக்கு சத்துமிகு சுகாதாரமான தினை லட்டு, வேகவைத்த கொண்டைக்கடலை, உளுந்தங்கஞ்சி ஆகியன வழங்கப்பட்டது.

**அட்மா திட்ட நிதியுதவியுடன் கூடிய அறிவியல் ரீதியான கறவைமாடு வளர்ப்பு சம்பந்தமான பண்ணைப்பள்ளி**

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் அட்மா



திட்ட நிதியுதவியுடன் அறிவியல் ரீதியான கறவைமாடு வளர்ப்பு என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளியை மூன்று மாதங்களில் 25 விவசாயிகளை கொண்டு எருமைப்பட்டி வட்டாரத்திலுள்ள கெஜகோம்பை என்ற கிராமத்தில் நடத்தியது. இந்நிகழ்ச்சியினை நாமக்கல் வேளாண்மைத் துறை இணை இயக்குனர் திரு. எஸ். சேகர் அவர்கள் கலந்து கொண்டு 19.07.2018 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சி தொடங்கு முன் கறவைமாடு சம்பந்தமான திறன் குறித்து விவசாயிகளிடம் கேட்டறியப்பட்டது. முதல் வகுப்பில் கறவைமாடு வளர்ப்பதற்கு கன்றுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், பல் பார்த்து வயது கண்டறிதல் குறித்த தொழில்நுட்பங்கள் எடுத்துரைக்கப்பட்டது. 25.07.2018 அன்று மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் வகுப்பில் மாடுகளுக்கு சமச்சீரான உணவு அளிப்பதினால் உற்பத்தியில் உண்டாகும் மாற்றங்கள் குறித்த உரைகளும், குறைந்த செலவில் சமச்சீரான உணவு தயாரிப்பதற்கான திறன் மேம்பாட்டு செயல்விளக்கமும் மேற்கொள்ளப்பட்டது. 01.08.2018 அன்று மூன்றாம் வகுப்பில் விவசாயிகளால் கிலோ ரூ. 17 -க்கு கிடைக்கும் அதாவது மலிவாக கிடைக்கும் உணவுப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய உணவியல் துறை உதவிப்பேராசிரியர் பரிசோதனையிட்ட சத்துக்களின் அளவை எடுத்துரைத்தார். யூரியா மற்றும் சாதாரண உப்புக் கொண்டு உலர் தீவனத்தின் திறனை மேம்படுத்தும் செயல்விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது. 20 தீவன வகைகளும் 25 நீர் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டு நைட்ரேட் நச்சுத்தன்மை கண்டறியப்பட்டது. பருவமற்ற காலங்களில் உணவுத்தட்டுபாட்டை குறைக்க பசுந்தீவனம் மற்றும் கரும்பு கரணைகள் கொண்டு ஊறுகாய் புல் தயாரித்தல் குறித்த செயல்விளக்கம் நான்காம் வகுப்பில் செய்து காண்பிக்கப்பட்டது. அசோலா வளர்ப்பது குறித்தும், கறவைமாடுகளின் குணாதிசயங்கள் குறித்தும் மற்றும் உடல் எடை கணக்கிடல் பற்றிய விவசாயிகளின் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது. 31.08.2018 அன்று மேற்கொள்ளப்பட்ட 5 ம் வகுப்பில் தூய்மை பால் உற்பத்தி குறித்தும், தொடர்ச்சியாக கடைப்பிடிக்க வேண்டிய குடல்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் மடிவீக்க நோய் கண்டறியும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக எஸ்.சி.சி. உபகரணம் குறித்த செயல்விளக்கம் செய்யப்பட்டது. பொட்டசியம் பெர்மாங்கனேட் கொண்டு மடி கழுவும் முறை பண்ணைப்பள்ளி விவசாயியைக் கொண்டு செய்யப்பட்டு மற்ற விவசாயிகளிடையே இம்முறை பின்பற்றுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. 05.09.2018 அன்று கடைசி வகுப்பில் பாலில் மதிப்பூட்டிய பொருட்கள் தயாரிக்கும் செயல்விளக்கம் செய்து காண்பிக்க நாமக்கல் கால்நடை மருத்துவ மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு பண்ணைப்பள்ளி விவசாயிகள் வரவழைக்கப்பட்டனர். அனைத்து பயனாளிகளுக்கும் தூயபால் உற்பத்தி தயாரிக்கும் முறைகள்

குறித்து தெளிவாக விவரிக்கப்பட்டது.

**விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்குவதற்கான விவசாயிகளின் நல்வாழ்வு பணிமனைக்கூட்டம்**



விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க வேண்டிய விவசாயிகளின் நல்வாழ்வு பணிமனைக்கூட்டம் நாமக்கல் மாவட்டத்தின் வட்டாரங்களான நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு, கபிலர்மலை, பள்ளிபாளையம், வெண்ணந்தூர், மல்லசமுத்திரம், பரமத்தி வேலூர், இராசிபுரம், சேந்தமங்கலம், எருமைப்பட்டி, மோகனூர் மற்றும் நாமக்கல் சேர்த்து 12 இடங்களில் நடத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கக்கூடிய தொழில்நுட்பங்களான சொட்டு நீர் பாசனம், பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டம், ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண் சார்ந்த இதர துறைகளிலுள்ள தொழில்நுட்பங்களான ஆடு, மாடு, கோழி வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப உரைகளை வழங்கினார்கள். மேலும் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. அதில் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கக்கூடிய தொழில்நுட்பங்களும் மற்றும் இயற்கையாக எளிதில் கிடைக்கக்கூடிய வளங்களை முறையாக பயன்படுத்துதல் குறித்து கருத்துக்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது.

**திருநெல்வேலி மற்றும் தேனி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப்பேராசிரியர்களுக்கான பயிற்சி**



திருநெல்வேலி மற்றும் தேனி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட உதவிப்பேராசிரியர்களுக்கு 06.08.2018 முதல் 08.08.2018 வரையிலும், அரியலூர் வேளாண்மை நிலையத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு உதவிப்பேராசிரியருக்கு 28.09.2018 முதல் 29.09.2018 வரையிலும் தேவையான அடிப்படை பயிற்சி நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முக்கிய பணிகள் மற்றும் பொறுப்புகள், மாதிரிப்பண்ணைகள், உள்ளிட மற்றும் வெளியிடப்பயிற்சிகள், கூட்டு முதல்நிலை செயல்விளக்கங்கள், அரசு தனியார் கூட்டிணைவு முறைகள், சுழற்நிதி செயல்பாடுகள், பதிவேடுகள் பராமரித்தல், விஞ்ஞானிகள் கூடுதல் பொறுப்புகள், விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தேவையான தொழில்நுட்பங்களை மேற்கொள்ள கிராமங்களை தேர்ந்தெடுக்கும் முறைகள், அக்கிராமத்தில் அடிப்படை ஆதாரங்கள் சேகரித்தல், எடுக்கப்பட்ட விவரங்களை பதிவு மற்றும் பகுப்பாய்வு செய்தல், திட்ட அறிக்கை தயார்செய்தல், பொதுவான பணிகள் மற்றும் தனி மற்றும் முக்கிய பணிகள், பண்ணை மேலாளர் பணிகள், பண்ணை பணியாளர்களின் செயல்பாடுகள், சுழற்நிதி செயல்பாடுகளில் ஆட்கூலிகளை பராமரிப்பது, பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டம் (நிக்ரா) ஆகிய தலைப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் நிக்ரா கிராமங்களான வடத்தூர் மற்றும் ஜம்புமடை பகுதிக்கும், ஒருங்கிணைந்த பண்ணையத்தை சரிவர பராமரிக்கும் விவசாயின் தோட்டமான ஊஞ்சபாளையத்திற்கும் அழைத்துச் செல்லப்பட்டு முக்கிய தொழில்நுட்பங்களான ஒருங்கிணைந்த பண்ணையம், மல்லிகை சாகுபடி, நிலக்கடலை + துவரை ஊடுபயிர் முறைகள், பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், கூண்டு முறையில் கோழி வளர்த்தல், பரண்மேல் ஆடு வளர்த்தல், மண்புழு உரம் தயாரித்தல், மீன் வளர்ப்பு, வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

**உலக சுற்றுச்சூழல் தினம் - 2018**



உலக சுற்றுச்சூழல் தினம் - 2018 ன் நினைவாக வேளாண்மை அறிவியல் நிலையம் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமமான கணபதிபாளையத்தில் 05.06.2018 அன்று மாவட்ட வனத்துறையுடன் இணைந்து நடத்தியது. இந்நிகழ்ச்சியின் போது மரம் நடுதல் ஊக்குவிக்கும் பொருட்டு 100 மரக்கன்றுகளை 50 விவசாயிகளுக்கு வேளாண்மை அறிவியல் நிலையம் வனத்துறை மூலம் வழங்கியது. ஒரு விவசாயிக்கு 2 மரங்கள் என்ற கணக்கில் அங்கக கரிமத்தை நிலைநிறுத்துவதற்காக வனத்துறை வழங்கி அக்கிராமத்தில் ஐந்து விவசாயிகளின் வீட்டில் வனத்துறை அலுவலர்களால் நடவு செய்யப்பட்டது. மாவட்ட வனத்துறை அலுவலர் முனைவர் காஞ்சனா தேவி அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மரம் நடுதல் குறித்தும் பிளாஸ்டிக் அல்லாத சுற்றுப்புறம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். பிளாஸ்டிக் பயன்பாட்டினை குறைக்கும் நோக்கில் வேளாண்மை அறிவியல் நிலையம் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தது. இதன் வழியாக மாதத்திற்கு சராசரியாக 500 பிளாஸ்டிக் டம்ளர்கள் மற்றும் தட்டுகள் உபயோகம் குறைக்கப்பட்டது. வேளாண் கழிவுகளை தீ வைத்து சுற்றுபுறத்தை மாசுப்படுத்தாமல் இருக்கும் பொருட்டு மறுசுழற்சி செய்யும் முறைகளை செயல் விளக்கம் செய்து காண்பித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல் காரணமாக குழி மற்றும் குவியல் முறையில் மாதிரி பண்ணைகளை அமைத்துள்ளது. இந்நிகழ்ச்சியில் 50 விவசாயிகளுடன் வேளாண்மை

அறிவியல் நிலைய விஞ்ஞானிகளும், வனத்துறை அலுவர்களும் கலந்து கொண்டார்கள்.

### தேசிய அளவிலான பருவநிலை மாற்றற்திற்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்ட ஆய்வு குறித்த பணிமனைக் கூட்டம்



சென்னையிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 18.06.2018 மற்றும் 19.06.2018 அன்று தேசிய அளவிலான பருவநிலை மாற்றத்திற்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டத்தின் செய்பணி விபரங்கள் (2017 - 2018) மற்றும் வருகின்ற ஆண்டு (2018 - 2019) செய்பணி திட்ட அறிக்கைக்கான பணிமனைக் கூட்டத்தை நடத்தியது. மேலும் இக்கூட்டத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பங்கேற்று தலைமையுரை வழங்கினார். தலைமையுரையில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் வேளாண்மை அறிவியல் நிலையமும், கால்நடை அறிவியல் பல்கலைக்கழகமும் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதை தெரிவித்தார்கள். ஹைதராபாத்தில் அமைந்துள்ள கிரிடா நிறுவனத்தின் முன்னாள் இயக்குனரும், வசுந்தரா நாயக் மார்த்தவாடா கிரிசி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் பி. வெங்கடேசவரலு அவர்கள் கலந்து கொண்டு நீர் சேமிப்பு, அங்ககக் கரிமத்தை நிலைநிறுத்தல் மற்றும் நிக்ரா திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளுடன் செய்பணி விபரங்கள் மற்றும் அடுத்த ஆண்டிற்கான திட்ட பணிகள் குறித்தும் கேட்டறிந்தார். ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் முனைவர் ஒய்.ஜி. பிரசாத் அவர்கள் இக்கூட்டத்தில் துவக்க உரையாற்றி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செய்பணி விபரங்கள் மற்றும் அடுத்த ஆண்டிற்கான திட்ட அறிக்கையும் கேட்டறிந்தார்.

தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்துறை இயக்குனர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் கூட்டத்தை வரவேற்று நிக்ரா சாராம்சத்தை எடுத்துரைத்தார். ஆந்திர பிரதேச பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்துறை இயக்குனர் முனைவர் பி. ராம்பாபு அவர்கள், கிரிடா நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் நிக்ரா திட்டத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ஜே.வி. பிரசாத் அவர்கள் கலந்து கொண்டு நிக்ரா திட்டத்தை பற்றி எடுத்துரைத்தார்கள்.




இக்கூட்டத்தில் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த 11 வேளாண்மை நிலைய தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு நிக்ரா திட்டத்தின் 2017 - 2018 ம் ஆண்டின் செய்பணி விபரங்கள் மற்றும் 2018 - 2019 ம் ஆண்டின் திட்ட அறிக்கை குறித்து எடுத்துரைத்தார்கள். 19.06.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தை சார்ந்த அலுவலர்கள் நாமக்கல் நிக்ரா திட்ட கிராமங்களான வடவத்தூர் மற்றும் ஜம்புமடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு நடைபெறும் செயல்பாடுகள் காண்பிக்கப்பட்டது, மொத்தமாக 33 அலுவலர்கள் இப்பணிமனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான தனிப்பயிற்சி / சிறப்புப் பயிற்சி



இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் நிதியுதவியுடன் நாமக்கல் மாவட்டத்தில் புறக்கடை நாட்டுக்கோழியிலிருந்து தரமான / ஆரோக்கியமான முட்டைகளை உற்பத்தி செய்தல் குறித்த திட்டத்தின் கீழ் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய கோழியின அறிவியல் துறையின் மூலமாக இரண்டு நாட்டுக்கோழி வளர்ப்பதற்கான தனிப்பயிற்சிகள் 10.09.2018 அன்றும் 12.10.2018 அன்றும் 87 விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கோழி வளர்பிற்கான தொழில்நுட்பங்கள், சமச்சீர் உணவு தயாரிக்கும் செயல் விளக்கங்கள், தடுப்புசி முறைகள் காண்பிக்கப்பட்டது. விவசாயிகள் அனைவரும் நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு கோழிப்பண்ணைகள் மற்றும் குஞ்சுப்பொறிப்பான் பகுதிகள் காண்பிக்கப்பட்டது.

### விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்க தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள்



மோகனூர் வட்டாரத்திலிருந்து கணபதிபாளையம் கிராமமும், நாமகிரிப்பேட்டை வட்டாரத்திலிருந்து ஒண்டிக்கடை கிராமமும், வெண்ணந்தூர் வட்டாரத்திலிருந்து மூலக்காடு கிராமமும் பயிரிடும் முறைகளை கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது. அக்கிராமத்திலிருந்து அடிப்படை ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு 2018 - 2019 ம் ஆண்டிற்கான திட்ட அறிக்கைகள் விவசாயிகள் நீடித்த நிலைத்த வருமானம் பெறுவதற்கு ஏற்றதாக தயார் செய்யப்பட்டு செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.

**உள்ளிடப்பயிற்சிகள்**



கடந்த ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018 வரை வேளாண்மை அறிவியல் நிலையம் 37 உள்ளிடப்பயிற்சிகள் 786 விவசாயிகளுக்கு வழங்கியது. நெல், பயறு வகைப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள், சான்றிதழ் விதை உற்பத்தி முறைகள், மரவள்ளி பழவகைகள், காய்கறி செடிகள், சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களின் உற்பத்தி முறைகள், மண்வள மேம்பாடு, அமில - கலவை உவர் சீர்திருத்த மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், பட்டுப்புழு வளர்ப்பு முறைகள், வேளாண் காடுகள் அமைத்தல், பெருமளவில் அங்கக பூச்சி விரட்டி தயாரித்தல், மாவு பூச்சி ஒட்டுண்ணி தயாரித்தல், சேமிப்பில் பூச்சி மேலாண்மை, வெண்பன்றி வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கறவை மாடுகளில் கருதங்காமை பிரச்சனை, இறால் வளர்ப்பு, விறால் வளர்ப்பு, கெண்டை மீன் வளர்ப்பு, கூண்டு முறையில் மீன் வளர்ப்பு, தீவன மேலாண்மை குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**வெளியிடப்பயிற்சிகள்**



கால சூழ்நிலைகள் மற்றும் விவசாயிகளின் தேவைகேற்ப 21 வெளியிடப்பயிற்சிகளை விவசாய நிலங்களில் 504 விவசாயிகளைக் கொண்டு நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் நடத்தியது. வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு துறையிலுள்ள முக்கிய மற்றும் தீர்வுகள் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**மாதாந்திர மண்டல பணிமனைக்கூட்டம்**



கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2018 வரை மாதாந்திர மண்டல பணிமனைக்கூட்டம் 12.04.2018, 15.05.2018, 13.06.2018, 17.07.2018, 14.08.2018 மற்றும் 11.09.2018 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடத்தியது. இக்கூட்டத்தில் 215 வேளாண் துறையை சார்ந்த களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பருவநிலைகேற்ற சாகுபடி குறிப்புகள் பற்றிய தொழில்நுட்ப உரை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் பல்வேறு வட்டாரங்களிலுள்ள பிரச்சினைகள் குறித்தும் அதற்கேற்ற தீர்வுகளும் விவாதிக்கப்பட்டது.

**கண்காட்சி அமைத்தல் / கலந்து கொள்ளுதல்**



வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த ஆறு மாதங்களில் இரண்டு கண்காட்சியினை 15.05.2018 நடைபெற்ற நாட்டுக்கோழி உள்ளிடபயிற்சியின் போதும் மற்றும் புதிய அறிவியல் தொழில்நுட்பங்கள் மூலம் கறவைமாடுகளில் இனப்பெருக்கத்திறனை அதிகரித்தல் என்ற தலைப்பில் நாமகிரிப்பேட்டை வட்டாரத்திலுள்ள மெட்டாலா என்ற கிராமத்தில் அமைந்துள்ள மைனர் பாக்கியம் மஹாலில் 28.08.2018 அன்றும் நடத்தியது. இக்கண்காட்சியில் 574 விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். வேளாண்மை அறிவியல் நிலையம் கால்நடைகளுக்கான தடுப்பூசிகளையும், தீவனப்பொருட்களையும், தீவன விதைகள், கரணைகளையும் வைத்திருந்தது. பாரம்பரியம் இயற்கை பொருள் உற்பத்தியாளர் நிறுவனம் இயற்கை இடுபொருட்களை கண்காட்சியில் விவாதித்திருந்தது. வேளாண் புதுமை வேளாண்மை மற்றும் இதர துறைகளுக்கு தேவைப்படும் இயந்திரங்களையும், பாலிகெம், ஹிந்துஸ்தான் நிறுவனங்கள் கால்நடைகளுக்கு பயன்படும் மருந்துகளையும் கண்காட்சியில் வைத்திருந்தது. நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன தீவன பராமரிப்புத்துறை பசுந்தீவனம் மற்றும் பாசனநீரிலுள்ள நைட்ரேட் நச்சுக்களின் அளவை கண்டறியும் செயல்முறை விளக்கத்தை விவசாயிகளிடம் செய்து காண்பித்தது. இதுமட்டுமல்லாமல் வேளாண்மை அறிவியல் நிலையம் நாமக்கல் வேளாண்மை துறையினால் நடத்தப்பட்ட விவசாயிகள் நல பணிமனைக்கூட்டத்தில் 02.05.2018 அன்றும், கோயம்புத்தூர் கொடீசியா வளாகத்தில் நடைபெற்ற அக்ரி பேர் இன்டக்ஸில் 13.07.2018 லிருந்து 16.07.2018 வரை, 24.08.2018 மற்றும் 26.08.2018 கலந்து கொண்டு கண்காட்சி அமைத்தது. மொத்தமாக 6571 விவசாயிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த வேளாண்மை அறிவியல் நிலைய தொழில்நுட்பங்களை கண்டு பயனடைந்தனர். தீவன விதைகள், பழ மரக்கன்றுகள், காய்கறி விதைகள், பயிர் வளர்ச்சியூக்கிகள், உயிரியல் இடுபொருட்கள், தாதுஉப்புக்கலவைகள், மீன் வளர்ப்பு சம்பந்தமான தொழில்நுட்பங்கள் வைக்கப்பட்டிருந்தது.

**மண் மற்றும் நீர் பரிசோதனை மற்றும் மண்வள அட்டை வழங்குதல்**



வேளாண்மை அறிவியல் நிலையம் கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2018 வரை 226 மண் மாதிரி மற்றும் 164 பாசன நீர் மாதிரிகளை விவசாயிகளிடமிருந்து பெற்று பரிசோதனை

மேற்கொண்டது. ஆய்வின் முடிவில் 236 மண்வள அட்டைகளும் 164 பாசன நீர் அட்டைகளும் பரிந்துரைகளுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மண்வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரமிடவும், உயிர் உரங்களை பயன்படுத்தவும் மற்றும் நுண்ணூட்டக்கலவையை இடவும் வலியுறுத்தப்பட்டது.

**விவசாயிகளை கௌரவித்தல்**




வேளாண்மை அறிவியல் நிலைய விவசாயிகளான திரு. பி. அல்லிமுத்து, மின்னக்கல், அவர்கள் சிறந்த முறையில் மாவில் ஒட்டுக்கட்டுதல் தொழில்நுட்பத்திற்காகவும், திரு. ஜே.ஆர். தன்ராஜ், கல்குறிச்சி வெள்ளாளப்பட்டி, அவர்கள் மரவள்ளியில் மரவள்ளி சிப்ஸ் தயாரிக்கும் இயந்திரத்தை பயன்படுத்தி மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரித்தமைக்கும், திரு. பி. சரவணன், அரியாகவுண்டம்பட்டி அவர்கள் கொடிவகைக் காய்கறி இயற்கை வேளாண்மையை கடைப்பிப்பதற்காகவும், ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறந்த புதுமையான விஞ்ஞானிக்கான விருதினை பெற்றார்கள். திரு. பி.இராமசாமி, ஜம்புமடை, அவர்கள் பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத்திட்டத்தின் கீழ் பரண்மேல் ஆடு வளர்ப்பு, குறைந்த செலவில் தீவன மேலாண்மை, பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், சைலேஜ் தயாரித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் கால்நடை வளர்ப்பில் பயன்படுத்தியற்காக கிரைடா நிறுவனத்தின் நிறுவன நாள் விழா 12.04.2018 அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற போது சிறந்த விவசாயிக்கான விருதினை பெற்றர்.

கோயம்புத்தூரில் உள்ள கொடீசியா வளாகத்தில் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்த பெற்ற விவசாய கண்காட்சி மற்றும் கருத்தரங்கு விழாவில் 26.09.2018 தீவனம் உற்பத்திற்கான தொழில்நுட்பங்கள் கண்காட்சியில் வைத்தமைக்காக வேளாண்மை அறிவியல் நிலையம் கலந்து கொண்டமைக்காக சான்றிதழை பெற்றது.

2017 - 2018 ஆம் ஆண்டிற்கான பருவநிலை மாற்றங்களுக்கேற்ற வேளாண்மை முனைப்புத் திட்டத்திற்கான பணியினை திறம்பட செய்தமைக்காகவும் நாட்டுக்கோழி வளர்ப்பில் திறம்பட தொழில்நுட்பங்கள் மற்றும் முக்கிய இடுபொருட்கள் வழங்கியதற்காகவும் 20.09.2018 - 22.09.2018 அன்று ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை பயன்பாட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் விருதினை பெற்றது.

**கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**

கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2018 வரை 1586 விவசாயிகள் மற்றும் மாணவர்களும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்து வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்கள். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் மாதிரி திடல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்புகேற்ற பண்ணைகள் பற்றிய செயல்விளக்கமும், பயிற்சி சம்பந்தமான தொழில்நுட்ப உரையும் வழங்கப்பட்டது. 606 வேளாண்மை பயிலும் மாணவ, மாணவியர்களும், 65 பங்களாதேஷ் சிட்டகாங்க் கால்நடை மருத்துவ அறிவியல் மாணவர்களும், 15 விஞ்ஞானிகள், கரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்திலிருந்தும் 36 விஞ்ஞானிகள், கர்நாடகா வேளாண்மை அறிவியல் நிலையத்திலிருந்தும் 935 விவசாயிகள், மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலிருந்தும் வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்கள்.



**உள்மாநிலங்களிடையேயான கண்டுநர் சுற்றுலா - பட்டறிவு பயணம்**



நிக்ரா கிராமங்களிலிருந்து 11 விவசாயிகள் பட்டறிவு பயணத்திற்கு திருப்பதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கும், சித்தூர் ராய் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கும், கதிரி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கும் 16.08.2018 மற்றும் 17.08.2018 அன்றும் மானாவாரி வேளாண்மையில் புதிய தொழில்நுட்பங்களை பெற்றுக் கொள்ளுவதற்காக அழைத்து செல்லப்பட்டார்கள். ஆகஸ்ட் 16-ஆம் தேதி அன்று திருப்பதியிலுள்ள ராஸ் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கும், மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கும், தானியங்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர்கள். அங்கு மானாவாரிக்கேற்ற உயர் விளைச்சல் தரும் நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு இரகங்கள், குழித்தட்டு நாற்றங்கால், அடர் நடவு முருங்கை சாகுபடி, செம்மை நெல் சாகுபடி, மூலிகை செடிகள், நிலக்கடலை விதை நேர்த்தி செய்யும் அமைப்பு, உயிர் உரங்கள் தயாரிக்கும் இடம், பண்ணை இயந்திரங்கள், தானிய வகைகள் மற்றும் சாகுபடி குறிப்புகள், ஆகிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் பெற்றுக்கொண்டார்கள். 17.08.2018 அன்று நிக்ரா விவசாயிகளும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் துறை விஞ்ஞானியும் சித்தூர் ராஸ் வேளாண்மை அறிவியல் நிலைய நிக்ரா கிராமமான பாகராபேட் மற்றும் கதிரி வேளாண்மை அறிவியல் நிலையத்தை பார்வையிட்டார்கள். அங்கு மழைநீரை சேமிக்க, மா வயலுக்கு குறுக்காக வரப்பு அமைத்தல், பாலித்தீன் கொண்டு தக்காளி மற்றும் தர்பூசணி வயலுக்கு நிலப்போர்வை அமைத்தல், அசோலா வளர்ப்பு, போன்ற தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டனர்கள். கதிரியில் மானாவாரி நிலங்களுக்குகேற்ற நிலக்கடலை இரகங்கள், நிலக்கடலை விதை உற்பத்தி முறைகள், நோய் மேலாண்மை முறைகள் பற்றிய கருத்துக்களை பெற்றார்கள்.

| வயல்வெளி சோதனையின் முடிவுகள் 2017–2018 | | | |
|---|---|---|---|
| வ. எண். | தலைப்பு | கிராமம் மற்றும் திடல்களின் எண்ணிக்கை பரப்பளவு | சோதனையின் முடிவுகள் |
| 1. | புதிய இரகமான கோ 52 நெல் இரகத்தினை பல்வேறுபட்ட நெல் பயிர் நடவு முறையை கொண்டு ஆய்வு | பெரப்பன்சோலை<br>5 எண்ணிக்கை<br>1 எக்டர் | கோ 52 இரகமானது செம்மை நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 7.40 டன் மகசூலை மற்ற ரகங்களையும், முறைகளையும் ஒப்பிடுகையில் பீபிடி 5204 இரகத்தை விடவும் அதிகமாக உள்ளது. |
| 2. | மானாவாரி இரகங்களுக்கேற்ற ஒரு முறையில் அறுவடை செய்யும் தீவனம் சோளம் இரகம் கொண்டு ஆய்வு | காரைக்குறிச்சிபுதூர்<br>5 எண்ணிக்கை<br>1 எக்டர் | கோ 27 தீவன சோளம் இரகம் எக்டருக்கு 31.5 டன் பசுந்தீவன மகசூலையும் பிசி 23 இரகம் எக்டருக்கு 28.2 டன் மகசூலையும் தந்துள்ளது. கோ 27 நோய் மற்றும் பூச்சி தாக்குதலும் இன்றி நல்ல மகசூலை தந்துள்ளது. |
| 3. | தக்காளியில் கூட்டு நுண்ணுயிர்க்கலவையின் பயன்பாடு பற்றிய ஆய்வு | கார்கூடல்பட்டி<br>5 எண்ணிக்கை<br>1.2 எக்டர் | அர்கா கூட்டு நுண்ணுயிர்க்கலவையை ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையுடன் உபயோகப்படுத்தியதில் தக்காளியின் சராசரி எடை 79.83 கிராமும், ஒரு செடியிலுள்ள பழங்களின் எண்ணிக்கை 96.29 மற்றும் தக்காளியின் மகசூல் எக்டருக்கு 63.60 டன்னும் பெறப்பட்டது. |
| 4. | கேரட் இரகமான பூசா ருத்ராவின் செயல்திறனை நாமக்கல் மாவட்டத்தில் அறியும் ஆய்வு | கார்கூடல்பட்டி<br>5 எண்ணிக்கை<br>0.4 எக்டர் | பூசா ருத்ரா மற்ற இரகங்களை ஒப்பிடுகையில் செடியின் நீளம் 23 செ.மீ. நட்ட 30 நாட்களிலும் 38.5 செ.மீ. 60 நாட்களிலும், கேரட்டின் நீளம் 22.7 செ.மீ. கேரட்டின் எடை இலையுடன் சேர்த்து 327.4 கிராம், கேரட் மட்டும் 151.8 கிராம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. |
| 5. | நாமக்கல் இரகங்களுக்கேற்ற கோவக்காய் இரகத்தினை தேர்வு செய்தல் | கார்கூடல்பட்டி<br>5 எண்ணிக்கை<br>0.2 எக்டர் | கோவக்காய் இரகம் டி.ஆர்.சி. 2 மற்ற இரகங்களுடன் ஒப்பிடுகையில் மகசூல் காரணிகளான செடியின் பக்க கிளைகள் நட்ட 5 மாதம் கழித்து 11 ஆகவும், காயின் நீளம் 7.5 செ.மீ. ஆகவும், சுற்றளவு 3.1 செ.மீ. ஆகவும் சராசரி எடையானது 23.1 கிராமும் பதிவு செய்யப்பட்டுள்ளது அத்துடன் எக்டருக்கு 7.5 டன் மகசூல் தந்துள்ளது. |
| 6. | தூய்மை பால் உற்பத்தியில் மடிகழுவும் கழனிகள் பற்றிய ஆய்வு | களங்காணி<br>20 கால்நடைகள் | சொமேடிக் செல்களின் எண்ணிக்கை மடிகழுவும் கலனை பயன்படுத்தியல் 50000 குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சராசரியாக நாளொன்றுக்கு பாலின் அளவு 0.75 லிட்டர் அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. |











## வெற்றிக்கதை

| | | |
|---|---|---|
| 1. | விவசாயின் பெயர் மற்றும் முகவரி |  திரு. **ப. ஸ்டாலின்** த/பெ. **பழனியப்பகவுண்டர்**<br>5/114, நொச்சிப்பட்டி, கல்யாணி அஞ்சல்,<br>நாமக்கல் மாவட்டம் - 637 018.<br>அலைபேசி எண் : 99944 13749 |
| 2. | பண்ணை விபரம் | சான்றிதழ் விதை உற்பத்தி (பாசிப்பயிறு விதை உற்பத்தி - 4.0 ஏக்கர், உளுந்து விதை உற்பத்தி - 4.0 ஏக்கர்) |
| 3. | ஆண்டு வருமானம் | ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 3.04 லட்சம் |
| 4. | கடைபிடித்து வரும் புதிய தொழில்நுட்பங்கள் | ❖ பயிறு வகை பயிர்களில் ஆண்டு முழுவதும் ஆதார விதை உற்பத்தி செய்தல்<br>❖ பூச்சிகளைக் கட்டுப்படுத்த சூரிய விளக்குப் பொறி அமைத்தல்<br>❖ பயிறுவகை பயிர்களில் பயிறுவகை அல்லாத பயிர்களை களைதல்<br>❖ ஒரே சமயத்தில் அறுவடைக்கு வருவதால் (கோ-8, வம்பன்-8) இயந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்தல் |
| 5. | செய்முறையில் உள்ள தொழில்நுட்பங்கள் | ❖ உயர்விளைச்சல் பெறும் பாசிப்பயிறு ரகங்கள் (கோ-8) அறிமுகம் செய்தல்<br>❖ மண்வழி ஊட்டமாக டிரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ /எக்டர் இடவும். ரைசோபியம் கொண்டு விதைநேர்த்தி 600 கிராம் / 8 கிலோ மற்றும் மண்வழி ஊட்டமாக 1 கிலோ / எக்டர்<br>❖ இனக்கவர்ச்சி பொறி வைத்தல் 12 எண்ணிக்கை / எக்டர்<br>❖ பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரங்கள் இடுதல் (25 : 50 : 25 கிலோ தழை : மணி : சாம்பல் சத்து / எக்டர்)<br>❖ தேவைக்கேற்ற பூச்சி கொல்லி தெளித்தல் |
| 6. | நோய் மேலாண்மைக்காக கடைபிடிக்கும் தொழில்நுட்பங்கள் | பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு இயற்கை இடுபொருட்கள், உயிரியல் காரணிகள் இடுதல், சூரிய விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி வைத்தல். |
| 7. | வேலைவாய்ப்பு அளித்தல் | வருடம் முழுவதும் விவசாயப் பெண்மணிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்தல். |
| 8. | மற்ற நிறுவனங்களுடான தொடர்பு | ❖ வேளாண்மை துறை, நாமக்கல்.<br>❖ வேளாண்மை அறிவியல் நிலையம், சேலம்.<br>❖ கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகம், நாமக்கல். |
| 9. | பொருளாதார நிலை | வருடத்திற்கு நிகர இலாபமாக பாசிப்பயிறு மற்றும் உளுந்திலிருந்து ரூ. 3.04 லட்சம் 8 ஏக்கரிலிருந்து பெறுதல். |


**மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

முதுநிலை விஞ்ஞானி
பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலைய வளாகம்
நாமக்கல் - 637 002


ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம், நாமக்கல்

பெறுநர்

திரு./ திருமதி. ____________________

____________________

அனுப்புநர் ____________________

முதுநிலை விஞ்ஞானி, பேராசிரியர் மற்றும் தலைவர்
ICAR - வேளாண்மை அறிவியல் நிலையம்
நாமக்கல் - 637 002